# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

C.C. No.257/2024

P.W.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாலுசாமி |
| தந்தை பெயர் | : | பொன்னுசாமி |
| கிராமம் | : | 6/122, கிழக்கு தோட்டம், உஞ்சனை, திருச்செங்கோடு வட்டம். |
| வட்டம் | : | |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 56 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Bench Clerk in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 05.11.2024.

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் மேற்சொன்ன விலாசத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு நானும், முத்துக்குமார் என்பவரும உஞ்சனை பஸ் ஸ்டாப்பில் காலை சுமார் 10 மணிக்கு நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்கு அடையாளம் தெரியாத ஒருவர் மோட்டார் சைக்கிளில் திம்மராவுத்தம்பட்டி பிரிவு ரோட்டில் இருந்து திருச்செங்கோடு –நாமக்கல் மெயின் ரோட்டிற்கு வந்தார். அப்போது திருச்செங்கோட்டில் இருந்து நாமக்கல் நோக்கி வந்த ஒரு லாரி அவர் மீது மோதியதில் அவர் கீழே விழுந்துவிட்டார். அவர் அடிப்பட்டு கிடந்தார். உடனே விவேகானந்தா மருத்துவமனை ஆம்புலன்சுக்கு நான் போன் செய்து சொன்னேன். அந்த ஆம்புலன்சு வந்ததும் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். விபத்தை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. அடிப்பட்டவருக்கு தெரிந்தவர் யாரும் அங்கு இல்லாததால் நான் இந்த விபத்து குறித்து நடவடிக்கை எடுக்குமாறு திருச்செங்கோடு ஊரக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் தான் அது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதாகும். அந்த புகார் **அ.த.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். அடிப்பட்டவர் இரண்டு, மூன்று நாள் கழித்து மருத்துவமனையில் இறந்துவிட்டதாக நான் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-1.pdf

www.ecourtsindia.com

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எனது மனைவி பஞ்சாயத்து தலைவராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். போலீசார் சொல்லி தான் நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை நானாக தான் காவல்நிலையம் சென்றேன். அ.த.சா.ஆ.1 புகாரினை போலீசார் எழுதினார்கள் என்றும், நான் அதில் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். நான் உஞ்சனை பஸ் ஸ்டாப்பில் டீ குடித்து கொண்டிருந்தேனா என்றால் இல்லை. பேக்கரி அருகில் இருந்து பேசிக்கொண்டிருந்தேன். அப்போது டமார் என்று சத்தம் கேட்டு தான் போய் பார்த்தேன் என்றால் சரிதான். நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்த போது விபத்தில் இறந்து போன நபர் சாலையை கடக்க முயற்சித்த போது வாகனம் மோதி விழுந்துவிட்டார் என தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்டவர் யார் என்று தெரியாது என்றால் அப்போது யார் என்று தெரியாது.

(மறுவிசாரணை –இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

VIJAYA KUMAR S

Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2024.11.05 16:50:09 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-1.pdf

www.ecourtsindia.com



## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

C.C. No.257/2024

P.W.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகேசன் |
| தந்தை பெயர் | : | சின்னுசாமி |
| கிராமம் | : | 5/24, தேவேந்திரர் தெரு, உஞ்சனை அஞ்சல், திருச்செங்கோடு |
| வட்டம் | : | |
| தொழில் | : | விவசாய கூலி |
| வயது | : | 55 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Bench Clerk in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 05.11.2024.

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் மேற்சொன்ன விலாசத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு நானும், உஞ்சனை பஞ்சாயத்து தலைவரின் கணவருமான பாலுசாமி என்பவரும் உஞ்சனை பஸ் ஸ்டாப்பில் பால் சொசைட்டி முன்பாக காலை சுமார் 11 மணிக்கு நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எங்களுக்கு அடையாளம் தெரியாத ஒருவர் மோட்டார் சைக்கிளில் திம்மராவுத்தம்பட்டி பிரிவு ரோட்டில் இருந்து திருச்செங்கோடு –நாமக்கல் மெயின் ரோட்டிற்கு வந்தார். அப்போது திருச்செங்கோட்டில் இருந்து நாமக்கல் நோக்கி வந்த ஒரு லாரி அவர் மீது மோதியதில் அவர் கீழே விழுந்துவிட்டார். அவர் அடிப்பட்டு தலை மற்றும் உடலில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தது. பாலுசாமி உடனே விவேகானந்தா மருத்துவமனை ஆம்புலன்சுக்கு போன் செய்து சொன்னார். அந்த ஆம்புலன்சு வந்ததும் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். விபத்தை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. பாலுசாமி டிரைவர் தேனி மாவட்டத்தை சேர்ந்தவர் என்று சொன்னார். அடிப்பட்டவருக்கு தெரிந்தவர் யாரும் அங்கு இல்லாததால் இந்த விபத்து குறித்து நடவடிக்கை எடுக்குமாறு பாலுசாமி திருச்செங்கோடு ஊரக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-1.pdf

www.ecourtsindia.com

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

விபத்து நடந்த இடமானது வளைவான சாலை என்று சொன்னால் சரியல்ல. நேரான சாலையாகும். வளைவான சாலை என்றால் லேசான வளைவு சாலையாகும். நான் அ.சா.1 உடன் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் டமார் என்று சத்தம் கேட்டு சென்று பார்த்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்த போது விபத்தில் அடிப்பட்ட நபர் சாலையை கடக்க முயற்சிக்கும் போது வாகனம் மோதி கீழே விழுந்துவிட்டதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்ட நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

(மறுவிசாரணை –இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல
என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு
படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு
என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து
இட்டார்.

VIJAYA KUMAR S
Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2024.11.05 16:50:20 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-1.pdf

www.ecourtsindia.com



DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.
C.C. No.257/2024
P.W.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகேசன் |
| தந்தை பெயர் | : | மாரிமுத்து |
| கிராமம் | : | பாலாஜி நகர், உஞ்சனை, திருச்செங்கோடு வட்டம் |
| வட்டம் | : | |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 44 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Bench Clerk in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 05.11.2024.

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் மேற்சொன்ன விலாசத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 24.08.2021ம் தேதி காலை சுமார் 10.40 மணிக்கு திருச்செங்கோடு ஊரக காவல்நிலைய போலீசார் உஞ்சனை பால் சொசைட்டி அருகே உள்ள பஸ் ஸ்டாப்பிற்கு வந்து ஒரு விபத்து நடந்தது சம்பந்தமாக அங்கு நின்று கொண்டிருந்த என்னையும், எனக்கு தெரிந்த வேல்மணி என்பவரையும் சாட்சியாக இருக்குமாறு சொல்லி சம்மதித்தன் பேரில் அந்த இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஒரு வரைபடம் வரைந்து எழுதி கொண்ட ஆவணத்தில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதாகும். அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.2/அ.சா.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-1.pdf

என்றால் சரிதான். மற்ற படி அதில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

(மறுவிசாரணை –இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

VIJAYA KUMAR S
Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2024.11.05 16:50:32 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-1.pdf

www.ecourtsindia.com



**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.**
**C.C. No.257/2024**
**P.W.4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | வேலுமணி |
| தந்தை பெயர் | : | சண்முகம் |
| கிராமம் | : | தேவனாம்பாளையம், கந்தம்பாளையம் அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம். |
| வட்டம் | : | |
| தொழில் | : | மெக்கானிக் |
| வயது | : | 34 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Bench Clerk in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 05.11.2024.

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் மேற்சொன்ன விலாசத்தில் குடியிருந்து மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். கடந்த 24.08.2021ம் தேதி காலை சுமார் 10.30 மணியிலிருந்து 11 மணிக்குள் திருச்செங்கோடு ஊரக காவல்நிலைய போலீசார் உஞ்சனை பால் சொசைட்டி அருகே உள்ள பஸ் ஸ்டாப்பிற்கு வந்து ஒரு விபத்து நடந்தது சம்பந்தமாக அங்கு நின்று கொண்டிருந்த என்னையும், எனக்கு தெரிந்த முருகேசன் என்பவரையும் சாட்சியாக இருக்குமாறு சொல்லி சம்மதித்தன் பேரில் அந்த இடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஒரு வரைபடம் வரைந்து எழுதி கொண்ட ஆவணத்தில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.2 பார்வை மகசரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதாகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் கேட்டு கொண்டதன் பேரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மற்ற படி அதில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-1.pdf

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com



என்றால் சரிதான்.

(மறுவிசாரணை –இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

VIJAYA KUMAR S

Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2024.11.05 16:50:42 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-1.pdf